**செய்தி வெளியீடு எண்.925**

**செய்தி வெளியீடு - 30.10.2008**

**இலங்கைத் தமிழர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கிட விரும்புவோர்க்கு தலைமைச் செயலாளர் வேண்டுகோள்**

இலங்கையில் பாதிப்பிற்கு ஆளாகியிருக்கும் தமிழர்களுக்கு உதவுவதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி நிதி உதவிகளும், நிவாரணப் பொருள்களும் பெருமளவில் வந்து குவிந்த வண்ணம் உள்ளன. இது குறித்து வெளியிடப்பட்ட அரசின் வேண்டுகோளை உள்ளடக்கிய விளம்பரத்தில், நிதியுதவி தர முன்வருவோர் காசோலையாகவோ (Cheque) அல்லது வரைவு காசோலையாகவோ (Demand Draft) தலைமைச் செயலாளர் அவர்களுக்கு அனுப்பி வைக்கலாம் என்றும்; உணவுப் பொருள்கள், புதிய துணி வகைகள் ஆகியவற்றை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் ஒப்படைக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, நிவாரண உதவிகள் வழங்குபவர்கள் இந்த நெறிமுறைகளைத் தவறாது பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். நிவாரண உதவிகளைச் சேகரிக்கும் பொறுப்பு தனிப்பட்ட எந்தவொரு நபருக்கோ, நிறுவனத்திற்கோ, அமைப்பிற்கோ அரசினால் வழங்கப்படவில்லை. எனவே, நிவாரண உதவி வழங்குவோர், நிதி உதவியாக இருந்தால், "**SRI LANKAN TAMILS RELIEF FUND**" என்ற தலைப்பில் காசோலையாகவோ (Cheque) அல்லது வரைவு காசோலையாகவோ (Demand Draft) "தலைமைச் செயலாளர், தமிழ்நாடு அரசு, தலைமைச் செயலகம், சென்னை-600 009" என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும்; உணவுப் பொருள்கள் போன்ற நிவாரணப் பொருள்களாக இருந்தால், அவற்றை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் நேரடியாக அளிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நிவாரணப் பொருள்களை வழங்குபவர்கள் அழுகக்கூடிய உணவுப் பொருள்கள் மற்றும் துணி வகைகள் போன்றவற்றைத் தவிர்க்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுவதுடன் அரிசி, பருப்பு போன்ற தானியங்களுக்கே அதிகத் தேவையுள்ளது என்பதும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. சர்வதேசத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமே, பாதிக்கப்பட்டோருக்கு அனுப்பி வைக்கவும், வழங்கிடவும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

**தலைமைச் செயலாளர்**
**தமிழ்நாடு அரசு**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**